மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய விடுதிகள் கட்டுவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்றபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 389, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

389—

ஆரம்ப சுகாதார நிலையம்

*__635__—**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், செட்டிகுளத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி, செட்டிகுளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான அறிவுரையின்பேரில், 10-4-2013 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டு, தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் மக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒலியின் ஓசையாய், ஓங்காரத் திருவடியாய், அன்பின் திருவுருவமாய், உலகமே போற்றும் வெற்றித் திருமகளாய் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் நாளும் வணங்கும் எங்கள் குடும்பத்தின் தெய்வமாய் திகழும் தாய் இருக்கும் திசை நோக்கிப் பணிந்து வணங்குகிறேன்.*

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசா ஆசிரமம் அமைத்துச் செய்ததை, இன்று தமிழகத்தில் மருத்துவமனைகள் அமைத்து செய்து தரும் வாழும் தெரசாவாக இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அன்பே உருவான மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

வாக்களித்து, வெற்றி பெற வைத்த தொகுதி மக்களுக்கு, நன்றி மறவாமல் அவர்களது கோரிக்கையை, தாயுள்ளம் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர், ஆறரை கோடித் தமிழர்களின் ஒளி விளக்கு, தமிழினத்தின் விடிவெள்ளி, இந்தியாவுக்கே வழிகாட்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) கனிவான பார்வைக்குக் கொண்டு சென்றதற்கு, 'ஓடுகாலி', 'துரோகி' என்ற பட்டம் என்றால், அம்மா, கருணை உள்ளத்தோடு, இன்னும் ஒரு முறை அந்தப் பட்டம் எனக்குக் கிடைக்க வரம் தர வேண்டுமென்று வேண்டி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதிக்குட்பட்ட ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலை ஊராட்சியில் மட்டும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. மேலக்கலங்கல் ஊராட்சியைச் சுற்றி, கீழக்கலங்கல்,* R. *நவநீதகிருஷ்ணபுரம், குறிச்சாம்பட்டி, வாடியூர் என ஆக மொத்தம் ஐந்து ஊராட்சிகள், 15 கிராமங்களை உள்ளடக்கியுள்ளது.*

இப்பகுதியின் மக்கள்தொகை 21,000-க்கும் மேற்பட்டுள்ளது. மேலக்கலங்கலில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்குத் தேவையான அரசு புறம்போக்கு நிலம், சர்வே எண் 142-ல் 4.50 ஏக்கர் உள்ளது. தற்போது, இப்பகுதி மக்கள் மருத்துவ வசதி பெறுவதற்கு 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள, ஊத்துமலை, சுரண்டை மற்றும் சங்கரன்கோவில் போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின்மூலம் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் கூடுதலாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுவரும் வேளையில், பிற்பட்ட பகுதியைச் சேர்ந்த கிராம மக்களின் நலன் கருதி, மேலக்கலங்கல் ஊராட்சியில் புதிதாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில், சங்கரன்கோவில் பகுதியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டும் 16 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அங்குள்ள கிராமப்புற மக்களின் மேன்மைக்காக உதவியிருக்கிறார்கள்.

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்பது அல்ல, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையாக மேம்படுத்தப்பட்டு, சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. 30,000 மக்கள்தொகைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை உருவாக்கி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 8]

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் துறை ரீதியாக ஆய்வு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதை குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பு மற்றும் நிதியம் நிறுவி விருதுகள் வழங்குதல், திட்ட மதிப்பீடுகள் செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தம், ஒருங்கிணைந்த பண்ணை முறையை ஊக்குவித்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் மூன்று அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற இலக்கினை அடையும் வகையில், 'தொலைநோக்குத் திட்டம், 2023'-ஐத் தீட்டி, அதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, திட்டம் மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் சார்பாக கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்:

1. தமிழ்நாட்டில் புத்தாக்கப் பண்பாட்டை வளர்ப்பதற்காக, அரசுத் துறைகளில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கு, மாநில திட்டக் குழுவில் "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" அதாவது Tamil Nadu Innovative Initiative என்ற ஓர் அமைப்பு நிறுவப்படும். முதற்கட்டமாக, இந்த அமைப்பு அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இது, படிப்படியாக அரசுத் துறை